# வைத்திய போதினி.

சித்திரப்படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்த
மான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

புக் 2. } 1911-ஹ டிஸம்பர்மீ 1உ { நெ. 12.


## நமது சந்தாநேயர்களுக்கோர் விண்ணப்பம்.

சென்ற ஜனவரி மாதம் முதற்கொண்டு நமது பத்திரிகையைப் பெற்றுவரும் சந்தா நேயர்களுக்கு 1912-ம் வருஷத்திற்குச் சேர வேண்டிய பத்திரிகை கிரயமாகிய நபர் ஒன்றுக்கு அடுத்த ஜனவரி மாதப் பத்திரிகையை வி. பி. மூலமாய் அனுப்புவோமாதலால் வி. பி-யைத் திருப்பிவிடாமல் பெற்றுக்கொள்ளும்படியாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அப்படிக்கின்றி பத்திரிகை பெற இஷ்டமில்லாதவர்கள் தயவுசெய்து உடனே எழுதித் தெரிவித்து விடுதல் நலமாகும். (பத்திராதிபர்.)

---

### சென்னை மகுடாபிஷேக தர்பார் கொண்டாட்டத்தில் வாசித்த
## ராஜ பக்தி போதனை.

**நாம்** இன்றைக்கு (12-12-11) ஒரு சுபசம்பவத்தைக் கொண்டாடும்படி இங்கே கூடியிருக்கின்றோம். இந்த விஷயம் நமது தேசத்தின் சரித்திர சம்பந்தமாக மிகவும் முக்கியமானது. ஹஸ்தினாபுரம் என்னும் டெல்லி நகரம் பூர்வகாலத்தில் இந்தியாவுக்கு ராஜதானியாக விளங்கியது. ஆயினும் இந்தியா முழுமைக்கும் சக்ரவர்த்தியாக அந்த டெல்லியில் ஸிம்ஹாஸநம் வஹித்தவர் ஒருவரும் இல்லை. நமது சக்ரவர்த்தியவர்கள் இன்று, இந்தத் தேசத்து அரசர்களும், ராஜப்பிரதிநிதிகளும், நியாயாதிபதிகளும், உத்யோகஸ்தர்களும், பிரபுக்களும் புடைசூழ வீற்றிருப்பார். அப்போது அவர்தாம் மகுடந்தரித்து ராஜ்யாதிகாரத்தை மேற்கொண்ட விஷயங்களை அவர்களுக்குத் தெரிவிப்பார்.

பூர்வகாலத்தில் பராக்ரமசாலிகளான பல அரசர்கள் தாம் உலகமுழுவதையும் ஒருகுடைக்கீழ் ஆள்பவர் என்பதற்கு அறிகுறியாக அசுவமேத யாகம் செய்தார்கள். ஆயினும், அவர்களில் ஒருவரும் இந்தியா முழுவதையும் ஆண்டதில்லை. இந்து அரசர்களுள் அசோகரும், முகம்மதிய அரசர்களுள் ஔரங்கஸேப்பும் மற்ற அரசர்களைவிட அதிக விஸ்தாரமான பிரதேசத்தை ஆண்டார்கள். அவர்களுடைய ராஜ்யங்கூட இந்த ராஜதானியின் தென்பாகம் வரையில் எட்டினதில்லை. அவர்களது

ஆளுகையோ நிலையற்று, சொற்ப காலத்திலேயே சீர்குலைந்து போயிற்று. நமது காருண்ய சக்ரவர்த்தியாகிய ஜார்ஜ் மன்னர் ஹிமாலயம் முதல் கன்னியாகுமரி வரையிலுமுள்ள இந்தியாதேசம் முழுவதையும் ஆளுவதன்றி, கிழக்கில் ஆஸாம், பர்மா என்னும் தேசங்களையும் மேற்கில் பலுசிஸ்தான் தேசத்தையும் தம் ஆட்சிக்குள் கொண்டிருக்கிறார். ஆசியாகண்டத்திலுள்ள இந்த இந்தியாமாத்திரமே இவர் ஆட்சிக்கு உட்பட்டதென்று நினைக்கிறீர்களோ, உலகமெங்கும் இவருடைய ஆட்சி செல்கின்றது. 'ஆங்கில ராஜ்யத்தில் சூரியாஸ்தமனம் ஆவதில்லை' என்னும் விஷயம் நீங்கள் படித்திருக்கிறீர்களல்லவா—ஆங்கில அரசாட்சிக்கு உட்பட்டநாடுகள் ஐந்து கண்டங்களிலும் உண்டு. அவற்றுள் முக்கியமானவற்றைக் கூறுவோம். அவர் தம் பூர்வீக ராஜ்யமாகக்கொண்டு தலைமுறை தலைமுறையாக ஆள்வது ஐரோப்பாகண்டத்திலுள்ள ப்ரிடிஷ் தீவுகள் இவையன்றி கனடா, ஆஸ்திரேலியா, தென் ஆப்ரிகா ஆகிய மூன்று தேசங்களும் மற்றக் கண்டங்களில் உள்ள முக்கிய ஆங்கிலேய ராஜ்யங்களாம். இவற்றோடு அங்கங்கே அநேக பிரதேசங்களும் நமது சக்ரவர்த்தியார் ஆளுகைக்கு உட்பட்டிருக்கின்றன. இவருடைய ராஜ்ய விஸ்தீர்ணத்தைப்பார்க்கிறபோது சக்ரவர்த்தி என்னும் பட்டத்திற்கு நமது ஜார்ஜ் மன்னரே ஏற்றவர் என்பதில் சற்றும் சந்தேகமுண்டோ?

நமது இந்தியாவை அரசு புரிந்த ஆங்கில அரசர்களுள் ஜார்ஜ் மன்னர் மூன்றாவதானவர். ஆயினும், இந்திய சக்ரவர்த்தி என்னும் பட்டத்துடன் தம் மனைவியாகிய மேரியரசியாருடன் முதல் முறையாக இந்தியாவுக்கு வந்தவர் ஜார்ஜ் மன்னரே.

இந்து அரசர்களுள் அசோகமகாராஜரும் முகம்மதிய அரசர்களுள் அக்பர் பாதுஷாவும் ராஜநீதி தவறாமல் குடிகளுக்கு நன்மையுண்டாகும்படி செங்கோல் செலுத்தினார்கள். அந்த அரசர் காலத்திலும் ஜனங்கள் நெடுங்காலம் உபத்திரவமும் பயமும் இன்றி இருந்தவர்கள் அல்லர். முற்காலத்தில் வேற்றரசர்கள் அடிக்கடி படையெடுத்து வந்தார்கள்; உள்நாட்டுக் கலகங்கள் பற்பல உண்டாயின; வரிகள் அமிதமாக இருந்தன; போக்குவரவுக்குரிய சாதனங்கள் நன்றாக இருந்ததில்லை. பஞ்சமும் கொள்ளைநோயும் அடிக்கடி நேர்ந்ததால் நாட்டில் உயிர்ச்சேதங்கள் உண்டாயின. இவற்றையெல்லாம் நிவிருத்திசெய்ய அந்த அரசர்கள் யாதொரு முயற்சியும் செய்ததாகத் தெரியவில்லை. நமது ஆங்கில அரசாட்சியில் நாட்டுக்கு நேரும் துன்பங்களை நீக்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். வைசூரி, விஷபேதி முதலிய கொள்ளை நோய்களைத் தடுக்கத் துரைத்தனத்தார் செய்யும் முயற்சி கொஞ்சமா. 1897-ம் வருஷம் நமது தேசத்தில் நேர்ந்த பஞ்சகாலத்தில் காருண்ய

கவர்ன்மெண்டார் தினந்தோறும் சுமார் 30,00,000 ஜனங்களுக்கு உண வளித்துப் போஷித்துவந்தார்கள். இதுவும் அன்றி, ரெயில், தபால், தந்தித்தபால், நல்லசாலைகள், பாதைகள் முதலியவற்றை ஏற்படுத்திப் போக்கு வரவுக்குரிய சாதனங்களில் யாதொரு குறைவுமில்லாமல் செய்திருக்கிறார்கள்; சுகாதாரத்திற்குரிய விதிகளையும் மார்க்கங்களையும் தேசமெங்கும் பரவச்செய்தார்கள். தர்மவைத்தியசாலைகளையும் ஔஷத சாலைகளையும் எங்கெங்கும் ஏற்படுத்தினார்கள். இந்த முகாந்தரங்களால் கொள்ளைநோய் முதலியவற்றால் உண்டாகும் அகாலமரணங்கள் பெரும் பாலும் குறைந்தன. மேலே சொன்ன காரணத்தினாலும் ராஜகலகம், சண்டை முதலியவை முற்றும் ஒழிந்தமையாலும் நமது தேசத்தின் ஜனத்தொகை நாளுக்குநாள் விருத்தியடைவதாயிற்று. விவசாயமும் கைத்தொழிலும் மேன்மேலும் விருத்தியடைந்தன. வட இந்தியாவி லும் தென் இந்தியா எங்கும் நீர்பாசனத்திற்குரிய சீர் திருத்தங்கள் பல செய்திருக்கிறார்கள். பெரிய ஆறுகளில் அணைக்கட்டுகள் கட்டி தண் ணீரை வாய்க்கால்களின் வழியாக நிலங்களுக்குப் பாயும்படி செய்திருக் கிறார்கள். இதன் பொருட்டாக மொத்தம் 14,000 மைல் நீளமுள்ள கால்வாய்கள் வெட்டியிருக்கிறார்கள். ஒரு காலத்தில் கரம்பாக இருந்த சுமார் 10,000,000 ஏகரா விஸ்தீர்ணமுள்ள பூபாகங்கள் இப்போது அவ்வளவும் நல்ல பலனைத் தரத்தகுந்த செய்கால் நிலங்களாக மாறியிருக் கின்றன. இந்த நன்மை ஒன்றே ஆங்கில அரசாட்சியின் சிறப்பைத் தெரிவிக்குமல்லவா.

இது நிற்க, தபாலும் தந்தித்தபாலும் நமக்கு எவ்வளவு நன்மையை விளைவிக்கின்றன! சொற்ப செலவில் வெகுசுலபமாக அதிவிரைவில் சமாசாரங்களை விரும்புமிடங்களுக்குத் தெரிவிக்கலாம். காலணாசெலவு செய்தால் இந்தியாவிலுள்ள எந்தப்பாகத்திற்கும் கடிதம் எழுதலாம் அல்லவா! ஆறணாசெலவிட்டால் அரைநாளில் இந்தியாவின் ஒருகோடி யிலிருந்து மறுகோடிக்குச் சமாச்சாரம் தெரிவிக்கலாமே. முற்காலத் தில் சாதாரணமாக இந்துக்களில் பிராமணரும் முகம்மதியரில் முல்லாக் களுமே படிப்பாளிகளாக இருந்தார்கள். இப்போது எல்லா ஜாதியாரும் கல்விகற்க அநுகூலம் ஏற்பட்டிருக்கின்றது. முன்காலத்தில் மத வித் ாசத்தால் மனிதருக்குப் பற்பல கஷ்டங்கள் நேர்ந்தன. ஆங்கில அர ட்சியார் மதசம்பந்தமான விஷயங்களில் பிரவேசிப்பதில்லை என்று க்குதத்தம் செய்து, அதுபோலவே எல்லா மதங்களையும் பக்ஷபாத றி ஒரேவிதமாகப் பாராட்டுகிறார்கள். முற்காலத்தில் எல்லா ஜாதி யும் துரைத்தன உத்தியோகத்தைப் பெற்றதில்லை. இந்தக் காலத் தியோக்யதையுள்ளவர்கள் யாவரானாலும் துரைத்தன உத்தியோகத்

தை நிராக்ஷேபமாக அடையலாம். இக்காலத்தில் நம்மபர்கள் ஜாதி வேற்றுமையின்றி ப்ரொவின்ஷியில், வைஸ்ரிகள் கௌன்ஸில் முதலிய இடங்களிலும் லண்டன் நகரத்திலுள்ள இந்தியா கௌன்ஸிலிலுங் கூட உத்தியோகங்களை அடைந்திருக்கிறார்கள்.

நமது தேசத்திலுள்ள பற்பல ஜாதிகள், பாஷைகள் மதங்கள், ஆசாரங்கள், சம்பிரதாயங்கள் முதலியவைகளால் உண்டாகும் பேதங்களை யோசிக்குங்கால், பக்ஷபாதமின்றி காக்கவல்ல ஸர்வாதிகாரமுள்ள பொதுவான ஒரே துரைத்தனம் நமது தேசத்திற்கு அத்யாவசிகமென்பது யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்கதே. அந்த துரைத்தனம் யாவரையும் ஒரேவிதமாக நன்குமதித்து, அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்று, ராஜ்ய முழுவதும் விருத்தியடைவதற்குச் சாதகமான வழியில் அனைவர்க்கும ஸ்வயாதிகாரத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கவேண்டும். நமது தேசத்தின் பூர்வசரித்திரத்தையும் இக்காலத்திய நிலைமையையும் யோசித்தால், இத்தன்மையான ராஜாங்கமே இப்பொழுது நமக்கு எற்றதென்பது தெளிவாகும். இப்படிப்பட்ட ராஜாங்கம் முன் நாளில் எதும் இருந்ததில்லை. இக்காலத்திலும் ஆங்கில அரசாட்சியிலன்றி, வேறு அரசாட்சிகளில் இத்தன்மைகளைக் காண்பது அரிது.

மேலே கூறிய நன்மைகள் தவிர இன்னும் பல நன்மைகளை இந்த ஆங்கில ராஜ்யத்தினால் அடைந்து வருகிறோம். இனியும் பல நன்மைகளை அடைவோம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இந்த ராஜ்யத்தின் சிறப்பே நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியாக உருவுகொண்டு விளங்குகின்றது.

முன்காலத்தில் பெரும்பாலும் அரசர்கள் தமது நன்மைக்காகவே ராஜ்யங்களை ஆண்டுவந்தார்கள். இந்தக் காலத்திலோ அரசர் குடிகளின் நன்மைக்காகவே அரசாட்சி புரிகின்றார். தம் நன்மையைக் கருதாமல் பிரஜைகளுக்காகப் பெரிதும் உழைத்து, அவர்களுக்கு நன்மை புரிபவரே நல்வேந்தர்! இப்பெரிய காரியத்திற்கு நமது சக்ரவர்த்தியை அருகராகச் செய்யவேண்டுமென்று நிச்சயித்து இவரது பாட்டியாரும் தந்தையாரும் மிக்க அன்புடன் இவருக்கு ராஜ்ய தந்திரங்களை அப்பியசிக்கும்படி செய்தார்கள்

'அடங்கக் கற்றவரே ஆளக்கற்றவர்' என்பதற் கிணங்க, ஜார்ஜ் மன்னர் இளமைப் பருவத்தில் கப்பல் தொழிலில் பழகும்போதே தாம் மற்றவர்களுக்குக் கீழ்ப்படியும் தன்மை உணர்ந்தார். இவரைப் பலமுறை தேசயாத்திரை செய்வித்துப் பற்பல தேசங்களின் விவரங்களை தெரிந்துகொள்ளும்படி செய்தனர். இவரைப்போல் வேறு எந்த அரசரும் இவ்வளவு தெரிந்துகொண்டவர் அல்லர். நமது சக்ரவர்த்தியவர்கள் தம

ராஜ்யாதிகாரத்திற்கு உட்பட்ட பற்பல நாடுகளுக்கும் விஜயஞ்செய்து, அவரவர்களுடைய தன்மைகளையும் ஆசாரங்களையும் நன்ருக அறிந்தவர். குடிகளோடு பழகி அவர்களுடைய சுகதுக்கங்களைத் தம்முடைய சுகதுக்கங்களாகக் கொள்வதே நல்ல அரசாட்சிக்கு லக்ஷணமென்பதை அவர் நன்கு உணர்ந்திருக்கிருர். உலகத்தில் நல்வாழ்க்கை என்பது இல்வாழ்க்கையே என்று உணர்த்த நமது சக்ரவர்த்தி தம் மனைவி மக்களுடன் மிக்க அன்புகொண்டு, மாசற்ற இல்வாழ்க்கையில் இன்பமடைந்து தம் குடிகளுக்கு நிதர்சனமாக விளங்குகிருர்.

நமது சக்கரவர்த்தி, தாம் இவ்வுலகில் தெய்வத்திற்கு பிரதிநிதியாக இருந்து, தாம் மேற்கொண்ட பெரிய கடமைகளைச் செய்வதில், தாம் கடவுளுக்கு உத்தரவாதி என்பதை உணர்ந்து ராஜ்ய கார்யங்களுக்கு தெய்வானுகூலமே பிரதானமென்று நம்பினவர். அதனுல் அவர் தம்முடைய மதத்தில் பற்றுடையவராகி மற்றவர்களுக்கும் நிதர்சனமாக இருக்கும்படி பகவதாராதனைக்காக ஒவ்வொரு வாரத்திலும் ஆதிவாரத்தை அதற்கென நியமித்திருக்கிருர். ஆதிவாரந்தோறும் இவர் எந்த இடத்தில் இருந்தபோதிலும், தெய்வ வணக்கத்தை மறப்பதில்லை. மன்னர் கடவுளருளால் தம் ராஜ்யத்தை ஆண்டு கடவுளுக்குப் பிரதம சேவகராகவும் பிரதிநிதியாகவும் இருப்பதினுல், எந்த மதத்துக்குரிய சாஸ்திரங்களிலும் அரசனை வணங்கி, கௌரவிக்க வேண்டுமென்று கட்டளையிட்டு இருக்கின்றது. நமது சக்கரவர்த்தி தம்முடைய நற்குண நற்செய்கைகளாலும், நம்மிடம் கொண்டிருக்கும் அன்பினுலும் நம்முடைய மரியாதைக்கும் அன்பிற்கும் வணக்கத்திற்கும் பாத்திரராயிருப்பதனுல் நாம் நமது காருண்ய சக்கரவர்த்தியை விசேஷமாக வணங்கிக் கௌரவிக்க வேண்டுவது அவசியமல்லவா?

அவரிடத்தில் பக்தியும் கௌரவமுமுள்ள குடிகளாகிய நாம் நம்முடைய அன்பையும் மரியாதையையும் மனோவாக்குக் காயங்களால் அவருக்குச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர் தம்முடைய பிரதிநிதிகள் முதலிய உத்தியோகஸ்தர் மூலமாகத் தெரிவிக்கும் அபிப்பிராயங்களுக்கு இணங்கி நடக்கவேண்டும். சட்டதிட்டங்களை அன்போடு அனுசரிக்கவேண்டும். ஏழைகளும் கல்வி கற்று விருத்தி யடைவதற்கும், சுதேச கைத்தொழில்கள் விருத்தியாவதற்கும், ஜனங்களுக்குள்ள துராசார துரப்பியாசங்கள் நீங்குவதற்கும் செய்யும் ஏற்பாடுகள் எங்கெங்கும் பரவிப் பயன்படும்படி நம்மாலியன்ற அளவு முயல்வதோடு நமது நாட்டின் நன்மையை நாடி மனமும் வாக்கும் மகிழ்வுடன் ஒத்து 'மன்னன் வாழ்க' என்று வாழ்த்தக் கடவோம்.

*Translated by*—C. R. NAMA SIVAYA.

## கக்குவாய் இருமல்.

**நிதானம்:**—கக்குவாய் இருமலென்னும் இவ்வியாதியானது பெரும்பாலும் சிறுவர்களுக்கும், வெகு அபூர்வமாய்ச் சில வாலிபர் அல்லது வயது முதிர்ந்தவருக்கும் உண்டாகும் ஒருவித தொத்துநோய். இது சாதாரணமாய் ஜீவிதகாலத்தில் ஒருவருக்கு ஒரு தடவை வந்தால் மறு தடவை வருவதில்லை. குழந்தைகளுக்குக் கக்குவாயிருமலைப்பார்க்கிலும் உபத்திரவம் செய்யத்தக்க கொடிய நோய் வேறொன்றுமில்லை. தொண்டை மூக்குகளினுள்ளிருக்கும் சிவந்த ஜவ்வுகளில் ஜனிக்கும் சில சூக்ஷ்ம கிருமிகளின் மூலமாய் இவ்வியாதி பரவுவதாய் இக்காலத்திய இங்கிலீஷ் வைத்தியர்களின் கோட்பாட்டுக் கிணங்கச் சீதளமான பூமியில் நடமாடுவதாலும், மிகக் குளிர்ந்த காற்றுத்தாக்குவதாலும், ஈரமான ஆடைகளை அணிவதாலும், பழைய ஆகாரங்களையும் கெட்ட பதார்த்தங்களையும் உபயோகிப்பதாலும் நெஞ்சில் தோஷங்கள் சேர்ந்து கபத்தை அதிகப்படுத்தி இவ்வித ரோகத்தை யுண்டுபண்ணுவதாக ஆரியர்களுடையவும் அபிப்பிராயமாகும். இந்த இருமல் ஆதியில் சாதாரண இருமலாக ஆரம்பித்துப் பின்பு சிறிது நாட்களுக்கெல்லாம் இவ்விருமல் மூச்சைப் பல நிமிஷங்கள் இழுத்துக்கொண்டே போகும்படி அவ்வளவு கோரமாக விருத்தியாய்ச் சில குழந்தைகளுக்கு அத்தருணத்தில் மூர்ச்சையையும் உண்டுபண்ணும். மிகக் கெட்ட இருமலில் சில சமயம் நாளொன்றுக்கு இருமலென்பது நமது காதுக்குக் கேட்கப்படாமலே உண்டாய் இருபது தடவைக்கு மேல் குழந்தைகளின் மூச்சை யிழுத்துக்கொண்டே போய் மகா சங்கடத்தை யுண்டுபண்ணுவதுண்டு. இவ்விருமலால் பீடிக்கப்படும் குழந்தைகளுக்கு இருமல் உண்டாகும் சமயம் சிறிது நேரத்திற்கு முன்னமே தெரிய வருமானதால் அப்பொழுது தனது தாய் முதலியவர்களை இழுத்துக்கட்டிக்கொண்டு பயத்துடன் பதறி யழத்துவக்கும்; சற்றுப்புத்தி வந்த குழந்தைகள் தாமிருக்குமிடத்தில் ஏதேனும் ஆதாரமிருந்தால் அதை நன்றாகப் பிடித்துக்கொண்டு இருமல் வருவதற்குச்சில நேரம் முன்னமே வெகு ஜாக்கிரதையாய் உட்கார்ந்த விடத்தில் ஸ்திரமாய்த் தங்களை நிலைநிறுத்திக் கொள்வார்கள். இந்த இருமலுண்டாகும் தருவாயில் அடிக்கடி வாந்தியுமெடுப்பதுண்டு. சில குழந்தைகளுக்கு இருமலின் வேகத்தினால் காதினுள்ளிருக்கும் ஜவ்வு கிழிந்து போவதும் மூக்கிலிருந்து இரத்தம் பெருகுவதும கண்கள் பிதுங்கி விழுவதுபோல் பயங்கரமாயிருப்பது முண்டு. கக்குவாயிருமல் ஆரம்பத்தில் கொஞ்சம் சுரம் ஜலதோஷம் இவைகளு மிருக்கும். மார்பில் பளுவாயிருப்பது போல் தோற்றும். சுரம் நின்றவுடன் இருமல் அதிகப்படும். இருமல் நின்றவுடன் குழந்தை சாதாரணமாய் ஆடிக்கொண்டிருக்கும் ஆனால்

இருமல் விட்டுவிட்டு வந்துகொண்டிருக்கும். இந்த வியாதி வெகுநாள் தொந்தரவு செய்யும்; சிலருக்கு இரண்டு வாரத்திலும், மற்றும் சிலருக்கு பன்னிரண்டு வாரங்களிலும் இது கிரமமாக குணத்தை யடையும்.

**சிகிச்சை:**—கக்குவா இருமலுண்டான குழந்தைகளை மற்றக் குழந்தைகளுடன் சேர்க்கக்கூடாது. இருமலால் கஷ்டப்படும் குழந்தைகளுக்கு எப்பொழுதும் கம்பளிப் போர்வை அல்லது ஆடைகளை உடுத்தியிருக்கவேண்டும். இருமல் ஆரம்பித்தவுடன் குழந்தையின் முதுகை ஒரு கையாலும், முன் நெற்றியை மற்றொரு கையாலும், கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளவேண்டும். முதுகையும் நன்றாய்த் தடவிக் கொடுக்கவேண்டும். போஸ்தக்காய்ப் போட்டுக் காய்ச்சிய ஜலத்தினால் முதுகிலும் மார்பிலும் நன்றாய்ச் சுடச்சுட ஒத்தடம் கொடுப்பது நலம். குளிர்ந்த காற்று வீசும் வெளிகளில் குழந்தைகளை விட்டிருக்கக்கூடாது, அப்போதைக்கப்போது ஆமணக் கெண்ணெய் கொடுத்து குடல்களைச் சுத்தமாக வைக்கவேண்டியது. நடுமுதுகிலும் மார்பிலும் கற்பூரத்தைலத்தையும் அடிக்கடி பூசிவரலாம். பால் கஞ்சி இனங்கள் முதலிய சீக்கிரம் ஜீரணமாகக்கூடிய புஷ்டிகரமான உணவுகளை வேண்டியவரையில் கொடுத்துவரலாம். அஜீர்ணம் செய்யக்கூடிய பதார்த்தங்களை கொஞ்சமும் கொடுக்கலாகாது. இருமும்போது வாந்ியானவுடனே ஆகாரம் கொடுத்தால் மற்றொரு தரம் இருமல் வருவதற்குள் ஜீர்ணமாய்விடும் நாம் சொல்லுவதை அறிந்து கொள்ளக்கூடிய புத்தியுள்ள குழந்தைக்கு உப்பு கரைத்த நீரை ஓர் அவுன்ஸ் சுத்தக்கண்ணாடி அல்லது பீங்கான் பாத்திரத்தில் வைத்து ஒரு நாளைக்கு மூன்று நான்கு தடவை மூக்கினால் உறியச் செய்வது நலமாகும். சுத்தமான காற்று மெதுவாக உலாவக்கூடிய அறையில் உஷ்ணகுணமுள்ள (கம்பளியிற் செய்த) படுக்கையில் குழந்தைகளைத் தலையுயரமாய் விட்டு மேலேயும் சுரசுரப்பில்லாத கம்பளப்போர்வையைப் போர்த்து வைக்கவேண்டும் சுரத்துடன் கூடிய கக்கிருமலில் முதலில் ஆமணக் கெண்ணெய் கொடுத்து வயிற்றைச் சுத்தமாக்கிப் பின்பு குறிஞ்சா (Ipecacuanha) மூலிகையின் வேர் இலைகளை உலர்த்திப் பொடி செய்து 5-லிருந்து 10 குன்றுமணி எடை எடுத்து விளாம்பிசின் கொஞ்சம் சேர்த்து மாத்திரை உருட்டித்தினம் மூன்றுநான்கு தடவைக் கொடுக்கக் கக்கிருமல் குணமாவதுண்டு. குறிஞ்சாவைக் கொடுத்துவர வாந்தியும் சற்று அதிகம் உண்டாய்க்கபத்தை நன்றாய் வெளிப்படுத்தி அடிக்கடி இருமல் வருவதைத் தடுக்கும். இதில் அதிகம் கபம் வெளிப்படாமலிருந்தாலும், இருமலும் நெஞ்சு வலியும் அதிகமிருந்தாலும் சுத்தமான நவாசாரத்தில் 10-குன்றுமணி எடை நாட்டு அதிமதுரக் கஷாயத்தில் (இந்த கஷாயம்

பொடித்த அதிமதுரத்தூளால் காப்பியைப்போல் போட்டுக்கொள்ள வேண்டும்) சேர்த்து அத்துடன் கறுவாப்பட்டைத்தூள் ஒன்றிலிருந்து 5-குன்றுமணி வரையில் குழந்தையின் வயதுக்குத் தக்கவாறு சேர்த்து ஒரு நாளைக்கு 6-தடவை (இரண்டு மணிக்கு ஒருதடவையாய்) கொடுக்கலாம். சுரமில்லாமலிருக்கிற பழகிய இருமலுக்கு இரண்டு மூன்றுவயது குழந்தைகளுக்கு ஒன்று அல்லது இரண்டு குன்றுமணி எடை பெருங்காயத்தைச் சுத்த நீரில் கரைத்து நான்கு தேக்கரண்டியளவு இரண்டு மணிக்கு ஒருதரம் கொடுப்பதும் நலம். கடுகை ஜலம் விட்டு அரைத்துக் கட்டியாகவெடுத்து முதுகின் நடுவிலும் மார்பில் தோல்பட்டைகளுக்குச் சமீபங்களிலும் பத்து பதினைந்து நிமிஷம் போல்டீசுமாதிரி கட்டி எடுத்துவிடுவதால் இருமலினால் நேரிடும்வருத்தம் நீங்கும். கடுகு போல்டீசு போட்டால் சற்றுநேரத்திற்கெல்லாம் உடனே எடுத்துவிட வேண்டும் இல்லையேல் கொப்புளித்துப்போய்த் தோல்வெந்துவிடும். பவழபஸ்மம், வராடபஸ்மம் இவைகளை மூன்று குன்றுமணி எடை சேர்த்துமிளகு கஷாயத்துடன் கொடுக்கலாம். கக்கிருமல் விட்டபிறகு பலங்குன்றி ஜீர்ணசக்தியில்லாத இளைத்த குழைந்தகளுக்குச் சுவாஸாசயங்கள் (Lungs) பலப்படவும், பசி எடுத்து ஜீர்ணசக்தியுண்டாகி உடம்பில் வலுவுண்டாவதற்கும் சாகபாதி க்ருதம், திராக்ஷாரிஷ்டம் என்கிற மருந்துகளைச்சில நாட்கள் உபயோகித்து வருவதால் அக்குழந்தைகள் சுகப்படும்.

பண்டித, எம். துரைசாமி அய்யங்கார்.

---

## A LESSON ON MALARIA.

## மலேரியா என்னும் விஷஜ்வரத்தைப்பற்றியவொருபாடம்

மலேரியா அல்லது விஷஜ்வரமென்பது அபாயகரமான ஒரு வியாதி; இதனால் பிரதிவருஷமும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு—முக்கியமாய் யௌவன பருவத்திலுள்ள ஜனங்களுக்கு—தேகதுர்ப்பல்மோ அல்லது மரணமோ சம்பவிக்கிறது. கொசுக்கடி மூலமாய் மனிதனின் இரத்தத்தில் புகுந்து அந்த இரத்தத்தையே உணவாகக் கொண்டிருக்கிற கிருமிகளால் இந்தவியாதி உண்டாகிறது. இரத்தத்திலே சிவப்பணுக்கள், வெள்ளையணுக்கள் என்னும் இருவகை அணுக்கள் இருக்கின்றன. விஷஜ்வரக் கிருமிகள் சிவப்பணுக்களைப் பீடித்து அவைகளில்பலவற்றை அழித்துவிடுகின்றன; இக்காரணத்தினால் தான் விஷஜ்வரத்தினால் வருந்தும் ஒருவன் தேகம் வெளுத்து மெலிந்து போகிறான். மேலும் ஷை கிருமிகளால் மண்ணீரலில் நாட்பட்ட வீக்க

மும் நோயும் ஏற்பட்டு இதனால் காலக்கிரமத்தில் ஜ்வரக்கட்டி உண்டாகிறது. விஷஜ்வரக் கிருமிகளில் மூன்று வகைகள் உண்டு; அவற்றுள் ஒரு வகையானது வெகுவேகமாய் விருத்தியடைகிறபடியால் பிரதி இருபத்துநாலு மணிநேரத்துக்கொருதடவை அவைகளிலிருந்து நூதன கிருமிகள் உற்பத்தியாகின்றன; மற்றொருவகையான கிருமிகள் பிரதி நாற்பத்தெட்டு மணிநேரத்துக் கொருதடவை விருத்தியடைகின்றன; மூன்றாவது வகையில் நூதன கிருமிகள் உற்பத்தியாவதற்கு எழுபத்திரண்டு மணிநேரம் பிடிக்கிறது. இப்படி விருத்தியடைவதெல்லாம் மனிதனின் இரத்தத்தில் நேரிடுகிறபடியால் அந்த இரத்தத்தில் நூதன கிருமிகள் முட்டையிலிருந்து வெளிப்படும் தக்ஷணமே ஒருவனுக்கு ஜ்வரம் காணுகிறது. ஆகையால் அவனுக்குக்காணும் ஜ்வரம் இன்ன விதமென்பது கொசுக்கடியினால் அவனுடைய தேகத்துக்குள் என்ன விதமான கிருமி செலுத்தப்பட்டிருக்கிறதோ அதை அனுசரித்ததாகும். முதல்வகையான கிருமியாயிருந்தால், அவனுக்குப் பிரதிதினமும் ஜ்வரம் வரும். இரண்டாம் வகையான கிருமியாயிருந்தால், ஒன்றுவிட்டு ஒரு நாள் ஜ்வரம் வரும் (இது சர்வ சாதாரணமானது); மூன்றாம் வகையானதாயிருந்தால் மூன்றுநாளைக் கொருதரம் ஜ்வரம் வரும்; இவ்வெல்லா விஷயங்களிலும் நோய்க்குச் சிகிச்சை செய்யாமல் விட்டிருந்தால்தான் மேற்கண்டபடி ஜ்வரம் வரும்.

இம்மூன்றுவகைக் கிருமிகளில் ஒவ்வொருவகையைச்சேர்ந்த கிருமிகளாலும் ஒவ்வொரு விதமான ஜ்வரம் உண்டாகிறதென்பதல்லாமல் இந்தகிருமிகளில் ஒருவகையைச் சேர்ந்தவைகள் மற்றொருவகையைச் சேர்ந்தவைகளிலிருந்து தோற்றத்தில் வேறுபட்டிருக்கிறபடியால் அணுதரிசனி என்னும் பூதக்கண்ணாடியைக்கொண்டு இரத்தத்தைப் பரீக்ஷித்துப் பார்க்கும்பட்சத்தில் கிருமியின் தோற்றத்தைக்கொண்டு நோயாளிக்கு இன்னவிதமான விஷஜ்வரம் கண்டிருக்கிறதென்று சாமார்த்தியமுள்ளவொருவன் உடனே சொல்லக்கூடும்.

விஷஜ்வரங்கண்ட ஒருவனுடைய இரத்தத்தில் இந்த கிருமிகள் வெகு அதிகமாயிருக்கக்கூடும்; ஒவ்வொரு இரத்தத்துளியிலும் அவை நூற்றுக் கணக்காய் இருக்கின்றன. பெண் கொசுக்கள் இரத்தத்தை உண்டு ஜீவிப்பவையாகையால் அவைகள் தங்களுக்கு உணவு கிடைப்பதற்காக மனிதரை நருக்கென கடிப்பதுமல்லாமல் அவைகளை ஓட்டாமலிருந்தால் ஒவ்வொரு தடவையிலும் பல இரத்தத்துளிகளை உறிஞ்சுவிடுகின்றன. எவனுடைய இரத்தத்தை கொசுக்கள் உட்கொள்ளுகின்றனவோ அந்த மனிதனுடைய இரத்தத்தில் விஷஜ்வரக் கிருமிகள் இருக்கும் பட்சத்தில் அந்தக்கிருமிகளில் அநேகம் அந்தக் கொசுக்களின்

இரைப்பையில் புகுந்துவிடும். அந்தக் கொசுவானது அனோபிலிஸ் (Anopheles) என்னும் ஜாதியைச்சேர்ந்த ஒரு குறிப்பிட்டவகையான தாயிருந்தால் அதன் இரைப்பையிலே ஷே கிருமிகளில் சில விருத்தியாகி இரைப்பையின் சுவரின் மூலமாய்த் துளைத்துக்கொண்டு அவ்வவயவத்தின் சவ்வுகளுக்குள்சென்று கடைசியாக அதன் உமிழ்நீர்க் கோளங்களில் பிரவேசிக்கும் அந்தக்கொசு மனிதனைக் கடிக்கும்போது தன உமிழ்நீர்க் கோளங்களில் அடங்கியிருப்பவைகளில் சிலவற்றை அவனுடைய தோலுக்குள் செலுத்துகிறது; அதனால், நம்மைக் கொசு கடிக்கும்போது நம்மெல்லோருக்கும் எவ்வளவோ பழக்கமாயிருக்கிற தினவு உண்டாகிறது; இந்த உமிழ்நீர்க்கோளத்திலுள்ள பதார்த்தத்திலேதான் விஷஜுரக் கிருமிகள் இருக்கின்றன; ஆகவே, இவ்விதமாக ஒரு மனிதனிடத்திலிருந்து இன்னொரு மனிதனுக்கு ஷே கிருமிகள் மாற்றப் படுகின்றன. இந்தக் கிருமிகள் மனிதனுடைய இரத்தத்தில் வெகுவேகமாய் விருத்தியடைகின்றன. இவைபோதுமான அளவுக்கு விருத்தியடைந்தபிறகு, அந்தமனிதனுக்கு ஜுரம் கண்டு, அதற்கப்புறம் அது பிரதி 24-அல்லது 48-அல்லது 72-மணிநேரங்களுக்கொருதடவை வந்துகொண்டேயிருக்கும்.

விஷஜுர வியாதிஸ்தனைக் கொசுகடித்தவுடனே அவனிடத்திலுள்ள கிருமியையும் ஜுரத்தையும் இன்னொருவனிடத்தில் மாற்ற முடியாது. கொசு விஷஜுர ரத்தத்தை உட்கொண்டபிறகு, கிருமிகள் அதன் உமிழ்நீர்க் கோளங்களில் புகுவதற்குமுன் பல நாட்கள் (சுமார் ஒரு வாரம்) கழியவேண்டும். மேலும் தொத்துவியாதி சம்பந்தமுள்ள கொசு தேகரோக்கியமுள்ள ஒருவனுக்குள் கிருமிகளைச் செலுத்தினவுடனே ஜுரம்காணுது அந்தகொசு சில கிருமிகளைமாத்திரமே செலுத்துகிறது; அவைகள் ஜுரமுண்டாகும்படி செய்யக்கூடியவைகளாயிருப்பதற்குமுன் அநேக லக்ஷக்கணக்காய் விருத்தியாகவேண்டும். சாதாரணமாக கொசுக்கடியுண்டானபிறகு முதல்தடவை ஜுரம் காணும்படி செய்வதற்குப் போதுமானபடி கிருமிகள் வளர்வதற்கு 14 நாளுக்குக் குறையாமலும் 24 நாளுக்கு மேற்படாமலும் பிடிக்கிறது.

எல்லா கொசுக்களுமே விஷஜுரத்தைப் பரவச்செய்யும் சக்தியுடையவைகளல்ல. பலவர்ணமுள்ள இறக்கைகளையுடைய கொசுக்களில் ஆனேபிலஸ் என்னும் ஜாதியைச் சேர்ந்தவைகளுக்கே அவைகளிலும் பெண் கொசுக்களுக்கு மாத்திரமே இந்த சாமர்த்தியம் உண்டாயிருக்கிறது.

கொசுக்களில் மேற்சொன்னவகைபோக மற்றதும் மிகசாதாரணமு

மான வகைக்கு குலிஸைன்ஸ் என்று பெயர். அவை விஷஜுரத்தைப் பரவச்செய்வதில்லை; ஆனால், போகப்போக யானைக்காலில் கொண்டு வந்துவிடக்கூடிய ஒருவித கடும் ஜுரத்தை உண்டாக்குகிற பிலேரியா என்னும் கிருமிகளை ஒரு மனிதனிடத்திலிருந்து இன்னொரு மனிதனுக்குப் பரவச்செய்கின்றன. ஆகவே கிராமங்களிலும் பட்டணங்களிலும் அவைகளைச் சுற்றிலும் உள்ள கொசுக்களையெல்லாம் அடியோடு அழிக்கவேண்டும்; ஜனங்கள் பரஸ்பரம் ஒத்துழைத்தால் இந்தக்காரியம் நிறைவேறும்.

வயதுவந்த அனோபிலைன் கொசுக்கள் சுவரின்மேல் தங்கும்போது தம் சரீரங்களை மூலைவாட்டாக வைத்துக்கொண்டிருக்கும்; அதாவது, தலையும், துதிக்கையும் (கொசுக்கள் கடிக்கும்வாயின் பாகமும்) சரீரமும் சமரேகையாயிருந்து, கொசுவானது சுவரில் சாய்வாக ஒட்டிக்கொண்டிருக்கும் ஒருசிறு முள்ளைப்போல் காணப்படும்; இந்த அடையாளத்தைக் கொண்டு இந்த ஜாதிக் கொசுக்களைத் தெரிந்துக்கொள்ளலாம். குலிஸைன் கொசுக்கள் சுவரின்மேல் தங்குகையில் அவைகளின் சரீரம் சுவர் மட்டத்துக்குச் சரியாயிருப்பதுடன் கூன்முதுகுள்ளவைபோல் காணப்படும். அனோபிலைன் கொசுக்கள் இளங்கபில நிறமுள்ளவைகளாகவோ கருங்கபில நிறமுள்ளவைகளாகவோ இருக்கும்; குலிஸைன் கொசுக்கள் சாம்பல் நிறமாகவோ கபில நிறமாகவோ கரு நிறமாகவோ இருப்பவைகளாய் வெண்ணிறப் பட்டைகள் அல்லது கீற்றுகள் உடையவைகளாயிருக்கும். அனோபிலைன் கொசுக்களின் இறக்கைகளில் புள்ளிகளிருக்கும்; குலிஸைன் கொசுக்களின் இறக்கைகள் சாதாவாயிருக்கும்.

எல்லாக் கொசுக்களும் ஜலத்தில் உற்பத்தியாகின்றன. ஜலத்திலேயே அவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. புழு தசையிலுள்ள (larvæ) அல்லது நெளிந்து புரண்டோடும் தசையிலுள்ள (wrigglers) கொசுக்கள் 24-மணி நேரமுதல் 48-மணி நேரத்துக்குள்ளாக முட்டைகளிலிருந்து ஜலத்தில் வெளிப்படுகின்றன. அப்போது உணவு கிடைப்பதற்காக நீர்மட்டத்துக்குக்கீழ் இருக்கவேண்டும். சுவாஸம் விடுவதற்காகக் அவைகள் இடையிடையே நீர்மட்டத்துக்குமேல் வரவேண்டிருக்கிறது; இல்லாவிட்டால் அவைகள் முழுகிப்போய்விடும். அவைகள் தேகத்தின் வால்நுனியிலுள்ள ஒரு குழாய் மூலமாய் சுவாஸம் விடுகின்றன. நெளிந்து புரண்டோடும் தசையிலுள்ள கொசுக்கள் நனைந்த புல்லிலாவது ஈரமான தரையிலாவது வளரமுடியாது. அவை குறைந்தது அரை அங்குலம் ஆழமுள்ள தண்ணீரில் ஜீவிக்கின்றன; அதனால் அவைகள் பூர்த்தியாய் வளர்ந்து தலைகீழாய் மிதக்கும்போது, நீரின் அடிப்பாகத்தைத் தொடாமலிருக்கின்றன.

புழுதசையிலிருக்கும் அனோபிலைன் ஜாதியைச்சேர்ந்த கொசுக்களை அவைக்ள் நீர்மட்டத்துக்கு அடியிலேயே தட்டையாய்ப் படுத்திருப்பதையும் துள்ளித்துள்ளி பின்பக்கமாய் அசைவதையுங்கொண்டு சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். குலிஸைன் ஜாதியைச்சேர்ந்த கொசுக்கள்நீரில் தலைகீழாய்த் தொங்குகின்றன; அவைகளுக்கு நீண்ட சுவாஸக்குழாய் இருக்கிறது; அவை நெளிந்து புரண்டு முன்னுக்கு அசைந்துசெல்லும்.

மேற்கண்ட புழுதசையிலாவது அல்லது நெளிந்து புரண்டோடும் தசையிலாவது அவைகளின் பூர்ணமான பரிமாணத்துக்குச் சரியாய் வளர்வதற்கு ஆறு முதல் பத்துநாள் வரையில் செல்லும்; சிலசமயத்தில் அதைவிடக் குறைந்த காலம் செல்லும். அவைகளின் பூர்ணமான பரிமாணத்துக்குச் சரியாய் அவை வளர்ந்துவிட்டால் அவை திடீரென்று தங்கள் தோல்களிலிருந்து வெளிப்பட்டுத் தண்ணீரில் அங்குமிங்கும் துள்ளிக்கொண்டு முற்றும் புதிய பூச்சிகளாய்க் காணப்படுகின்றன. இந்தப்பூச்சிகளுக்கு ப்யூபே (Pupæ) அல்லது நிம்புகள் (Nymphs) என்று பெயர். இந்த தசையானது இரண்டுநாள் முதல் நாலுநாள் வரையில் இருக்கிறது. பிறகு அவைகள் தண்ணீரின் மேற்பாகத்தில் மிதந்துகொண்டிருக்க, அவற்றிலிருந்து கொசுவானது இறக்கைகளுடன் கூடிய வயதுவந்த பூச்சியாக வெளிப்படுகின்றது; இந்தக்கொசு முழு வளர்ச்சியுடையதாய் ஒருவேளை உணவு கிடைத்தவுடனே தன் இனத்து ஜந்துக்களை உற்பத்திசெய்வதற்கு ஸித்தமாயிருக்கும். மூன்று நான்கு தினத்தில் அது நீரில் தன் முதல் வரிசை முட்டைகளையிட்டு இன்னும் அதிகமான முட்டையிடுவதற்காக அதிக இரத்தம் உறிஞ்சும் பொருட்டு இராக்காலத்தில் புறப்பட்டுப்போகும். (இன்னும்வரும்).

V. RAGAVA CHARLU,

*Tamil Translator to Government.*

---

## சுகாதாரவிதிகள்.

(சென்ற மாத சஞ்சிகையின் 190-வது பக்கத் தொடர்ச்சி.)

2. உணவு பானாதிகளில் மிதமுள்ளவர்களாயிருக்கவேண்டும். போதையுண்டுபண்ணும் பானங்களை உபயோகித்தல் தேகத்திற்கு மிகவுங்கெடுதி யுண்டாக்குவன என்பதைப்பற்றி நாம் அவ்வளவாக எடுத்துச்சொல்ல வேண்டுவதில்லை. நல்ல குடும்பத்தில் அவை விரும்பத்தகாத பானங்கள் என்று கருதப்பட வேண்டும். மிதம் என்பது இவற்றை ஒழிப்பது மட்டுமல்ல அதிகமான உணவை உட்கொள்வதையும் ஒழிக்கவேண்டும். பரிசுத்தமானதும் சாதாரணமானதும் உடம்பைப்போஷிக்கக்கூடியது

மான உணவே தினந்தோறும் உபயோகிப்பதா யிருக்கவேண்டும். மாமிஷபதார்த்தங்கள் பலத்தைக்கொடுக்கின்றன என்னும் விபரீத உணர்ச்சியை ஒழித்துவிடவேண்டும், பலமுண்டாக்குவதற்கு மாமிஷபதார்த்தங்கள் காரணமாக எண்ணக்கூடாது ஏனென்றால் அவை எவ்வளவுக்கெவ்வளவு விலையுயர்ந்தவையாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கு அவை உடலைப்போஷிக்கும் தன்மையிற்குறைந்தும் மாமிஷங்கள் அழுகுவதனு லுண்டாகும் கெட்ட வஸ்துக்குள் நிறைந்தும் இருக்கின்றன. கடுகு, மிளகு, மிளகாய் முதலியவை அதிகமாய்ச்சேர்ந்த காரபதார்த்தங்கள்சீரணக்கருவிகளில் உறுத்தலுண்டாக்கி அதிகதாகத்தைக் கொடுப்பதினுலே அவையும் பெரும்பான்மையும் நீக்கப்படுதல்வேண்டும். வாயிலிருக்கும்போதே உணவைச் செவ்வையாகமென்று உட்கொள்ளவேண்டும் அவசரமாகச் சாப்பிடக்கூடாது. சீக்கிரம் சாப்பிட்டேன் என்று சிலர்கொள்ளும் பெருமை வீண்பெருமை, அளவுக்குமிஞ்சிச் சாப்பிடக்கூடாது. வெயிற்காலத்தில்நாம் சாப்பிடும் உணவை ஜீரணிப்பதிலும் அவற்றிலுள்ள போஷணு வஸ்துக்களை உட்கொண்டு மீந்ததை வெளிப்படுத்துவதிலும் நமது ஜீரணக் கருவிகள்படும் அவஸ்தையே நாம அக்காலத்திற கொள்ளும் ஒருவிதமான களைப்பான உணர்ச்சிக்குக் காரணமாகும். வெயிற்காலத்தில் தேகத்தைச் சுககரமாகவும் வேலைக்குத் தகுதியுள்ளதாகவும் வைத்திருக்கவேண்டுமானுல் மிகவும் சொற்பமாகவும் மிதமாகவும் உணவை உட்கொள்ளவேண்டும்.

3. தேகத்தை மிதமிஞ்சி வெயில் காற்று மழை முதலியவற்றிலடிபடவைக்கக்கூடாது, இதனுல்காற்றுவெயில் முதலியவை உடம்பில் படக்கூடாதென்று அர்த்தமல்ல, வெளியில்போய் நல்லகாற்றில் நின்றுவேலை செய்யுந்தொழிலாளி உண்மையாகவே மிகவும் இன்பத்தை யனுபவிப்பவனே, சரியானபடி உடுப்புகள் மட்டும் தரித்திருப்பானேயானுல் அவன் பருவங்களின் மாறுதல்களினுல் யாதொரு கெடுதியுமடையமாட்டான். வெயில் முதலியவற்றில் உடம்பை அடிபடவைத்தல் என்று நாம்சொல்வதெல்லாம்கூடி உடம்பு சீதோஷ்ணநிலைமைகளினுல் பாதிக்கப்படக்கூடிய ஸ்திதியிலிருக்கும்போது சரியாகக்காக்கப்படவேண்டும். என்பதே உதாரணமாக உடம்பில் வேர்வை மிகுதியாகுங் காலத்தில் குளிர்ந்த காற்று மேலேபடும்படி சும்மா இருத்தல் அபாயத்துக் கேதுவுண்டாகும். அதுபோலவே அக்காலங்களில் பாதங்களை ஈரமாகவைத்திருத்தலானது ஜலதோஷ முதலிய பல வியாதிகளுக்கிடமாகும், இப்பேர்ப்பட்ட விஷயங்களில் சிறிது அசிரத்தையாயிருந்தால் அது நீண்ட வருத்தத்தைக்கொடுக்கும். நோவிற் காதாரமாகும் சில சமயங்களில் மரணத்தையும் விளைவிக்கும்.

4. எப்போதும் வேலையுள்ளவர்களாக யிருக்கவேண்டும். அதாவது உண்ணாமலும் உடுக்காமலும் உலகவாழ்க்கையைப் பிறவழிகளிலும் தனக்கும் பிறர்க்கும சுகமுள்ளதாக ஆக்காமலும் நாள்முழுதும் வேலை செய்துகொண்டிருக்கவேண்டும். என்பதும் இதன் பொருளல்ல தன்மரியாதையைக் காப்பாற்றுதலும் தன்னைத்தானடங்கியாழுதலும் தன்னாலான நன்மையைச் செய்தலும் எந்த விஷயத்திலும் தன்னாற்கூடுமான முயற்சிசெய்தலும் உலகவாழ்க்கையில் இன்பந்தரத்தக்க அழகிய பொருள்களுடன் பழகிவருதலும் முக்கியமாக எப்போதும் மனிதனைகப் பிறந்தவனுக்கு உள்ள கௌரவத்தையும் யோக்கியதையையும் மறந்துபோகாமற் காப்பாற்றுதலும் ஆகிய இவையும் இன்னம் இவைபோல்வன பிறவும் நோக்கமாக உடைமையே நாம்மேலே எப்போதும் வேலையுள்ளவர்களா யிருக்கவேண்டும் என்பதனாற் குறிப்பிட்டபொருள். கையினால் உழைத்து ஜீவிப்பதுயாதொரு விதத்திலும் இழிவானதல்ல அதைச்சரியானபடி செய்தால் அதுமனதையும உடம்பையும் நல் வழிப்படுத்தி உயர்த்துகின்ற தொழிலாகும். (இன்னும் வரும்.)

**பூ. ப. செல்லக்குமார கவுண்டர்,**
கணக்கன் பட்டி.

---

## போட்டுக்கட்டிவிட்டதற்காகக் கடுங்காவல் தண்டனையடைந்த ஓர் கோவில் தாசி.

சென்னையில் வசித்துவரும் ராஜம் என்னும் பெயருடைய ஒருகோவில் தாசி 1905-ம வருஷம் தன்சகோதரன் புத்திரியை ஸ்வீகாரமாய் எடுத்து வளர்த்து வந்தாள். அந்தப்பெண்ணுக்கு வயது பத்துஎன்று ஸ்வீகாரபத்திரத்தில் கண்டு இருவரும் பத்திரத்தை ரிஜிஸ்டர்செய்துகொண்டார்கள். 1910-ம் வருஷத்தில் சென்னையிலுள்ள அருணாசலேஸ்வரர் கோவிலுக்குப் பொட்டுகட்டிவிட எண்ணி மேற்படி ஆலயத்தின் டிரஸ்டிகளிடம் ராஜம் என்பவள் ஒருமெடிகல் சர்ட்டிபிகேட்டைத் தாக்கல்செய்தாள். அந்த சர்ட்டிபிகேட்டில் மேற்படி பெண்ணுக்குப் பதினேழு வயது என்று கண்டிருந்தது. ஆனல் 1905-ம் வருஷத்தில் மேற்படி பெண்ணுக்கு வயது பத்து என்று ஸ்வீகாரப்பத்திரத்தில் கண்டிருந்தபடியால் 1910-ம்வருஷத்தில் அவளுக்குப் பதினேழு வயது எவ்விதம் ஆகுமென்று டிரஸ்டிகள் சந்தேகித்து, ராஜம் தாக்கல்செய்த மெடிகல் சர்ட்டிபிக்கேட்டை அங்கிகரியாமல் சென்னையிலுள்ள சிறுவர் சம்ரட்சணை சங்கத்தின் கௌரவகாரிதரிசியான, டாக்டர் விஜயராகவலுடன் கலந்துயோசித்தார்கள்.

மிஸ்டர் விஜயராகவலு இப்போது அப்பெண்ணுக்குப் பொட்டு கட்டுவதை ஒப்புக்கொள்ள முடியாதென்றும், இன்னும் ஒரு வருஷங்கழித்துக் கட்டலாமென்றும் நயமாக மேற்படி தாசிக்குக்கூறி, அவள் காட்டிய மெடிகல் சர்ட்டிபிகேட்டையும் அவளிடமே கொடுத்து அவளை அனுப்பிவிட்டார். ராஜம் அத்துடன் பேசாதிருக்கக் கூடாதா? மறுபடியும் ஒரு வைத்தியரிடம் சென்று மேற்படி பெண்ணுக்குப் பதினாறு வயது என்று ஒரு மெடிகல் சர்ட்டிபிக்கேட்வாங்கி 1910-ஆம் ஆகஸ்டுமீ 6௳ பெண்ணைக் காஞ்சிபுரத்திலுள்ள ஒரு சிறு கோவிலுக்குப் பொட்டுகட்டிக்கொடுத்துவிட்டாள். இந்தச்செய்தியை அறிந்த சிறுவர் சம்ரட்சணை சங்கத்தார் உண்மையைக்கண்டு பிடிக்க விரும்பி முனிஸிபல் ரிகார்டுகளைத் தேடிப்பார்த்தார்கள். அவ்விதம் பார்த்ததில் மெற்படி பெண் 1895-ம் வருஷம் அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி பிறந்ததாகத் தெரியவந்தது. பெண்ணுக்கு மைனர் நீங்குவதற்கு முன்பு ராஜம் அப்பெண்ணைக் காஞ்சிபுரத்தில் பொட்டுக் கட்டிவிட்டது குற்றமென்று மெற்படி சங்கத்தார் கண்டு விஷயத்தை அதிகாரிகளுக்கு அறிவிக்கலானார்கள். இந்தியன் பினல்கோர்டு 372, 373-வதுசெக்ஷன்படி ராஜத்தைப்பிராசிகியூட்செய்து முதலில்செங்கற்பட்டு ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்டால் கேஸ் விசாரிக்கப்பட்டது. அவர் அவளை விடுதலை செய்துவிட்டார். மேற்படி சங்கத்தார் பழையபடியும் கேஸை ஹைகோர்ட்டுக்குக் கொண்டுபோனார்கள். மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன் கேஸை விசாரித்து சென்றமாதம் 2-ஆம் தேதி தீர்ப்புச்சொன்னார். ஜட்ஜ்மெண்டு மிக நீண்ட தொன்றாக இருந்தது. ராஜத்துக்கு ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. பொருளுக்கு ஆசைப்பட்டு தாசிகள் சிறுபெண்களை மைனர் நீங்குவதற்கு முன்பே கோவில்களில் பொட்டுக்கட்டிவிடுகிற வழக்கம். தென் ஜில்லாக்களில் அதிகமாக இருந்துவருகிறது. இப்படிப்பட்ட தாசிகளுக்கு இந்தக்கேஸ் ஒருநற்போதனையாக இருக்கிறது. சிறுவர் சம்ரட்சணையின் பொருட்டு மேற்படி சங்கத்தார் எடுத்துவரும் ஊக்கமும் கவலையும்பாராட்டத்தக்கது.

## விஷத்துக்கு மெய்யான மந்திரம்.

நமது ஹைதராபாத், கனம். நிஜாம் அவர்களுடைய பெயரைச் சொன்ன மாத்திரத்தில் விஷம் தீரும்படியாக அவர்கள் ஒருவகை சித்தியடைந்திருந்தார்கள். அந்த விபரங்கண்டு மந்திரமாகச்சொல்லவேண்டிய அவர்கள் பெயருடன் பல விளம்பரங்கள் வெளிப்படுத்தியிருந்தோம். அவற்றின் உதவியைக்கொண்டு அநேகர் ஆச்சரியப்படும்படி பல விடங்களில் விஷங்களைத்தீர்த்துக் கடிதங்கள் எழுதினார்கள். எந்தவகை மந்திரத்தால் தீராத கொடிய விஷங்களும் தீர்ந்திருக்கின்றன. இத்தகைய மந்திரம் உலகத்தில் பரவிவரும்போது திடுமென நிஜாமவர்கள் கால

மாய்விட்டார்கள். அதனுல்,இனி என் செய்வதென்று நாம் யோசித்திருந்தோம். அப்படியிருந்த கவலை தீரும்படி இப்போது அவர்கள் பேருக்குப்பதிலாக அவர்களின் குமாரரவர்களின் பெயரைச்சொன்னுல் முன்போலவே விஷம் நீங்குமென்று பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. ஆதலால், இனி அந்தப்பெயரைச்சொல்லி எல்லோரும் விஷத்தைப்போக்கிக்கொள்ளலாம். விஷத்தை இறக்கவேண்டிய காலத்தில் அவர்கள் பெயரைச்சொல்லி மந்திரம் உச்சரிக்கும் விபரமாவது.

**"ஏவிஷமே! உனக்து மிர் உஸ்மான் அலிகான் அவர்களுடைய சத்தியம் ஏற்பட்டிருக்கிறது. இறங்கிப்போ, நான் இதைப்பற்றி ஒரு மாதத்துக்குள் அவர்களுக்குத் தெரிவிப்பேன்."**

இந்த மந்திரத்தை விஷந்தீண்டினவனுக்குக் கேட்கும்படி உரதது‌ச் சொல்லிவிடவேண்டியது உடனே விஷம் நீங்கிவிடும். அதன்மேல் மேற்கண்ட மந்திரத்தில் குறித்தப்படி இவ்வாறு விஷம் நீங்கிய விபரத்தைப்பற்றி ஒரு மாதத்துக்குள் நிஜாம் அவர்களுக்கு, "தங்கள்பெயரால் இன்ன பெயருடையவருக்கு விஷம் தீர்ந்தது" என்று கடிதமெழுதிவிடவேண்டும். அவ்வாறு எழுதும் கடிதத்தின்மேல் கவரின் ஒரு மூலையில் பாம்பு விஷம் என்று அவர்களுக்கு அடையாளம் தெரியும்படி எழுதி வைக்கவேண்டும். கடிதமெழுதுவதாகக் குறிப்பிட்ட நாளைக்குள் எழுதாவிட்டால் மறுபடியும் விஷம் வந்துவிடும். ஆதலால் தவருமல் கடிதமெழுதவேண்டும். மந்திரம் சொல்லும்போது கடிதம் எழுதுவதற்குச்சொல்லும் நாளை இஷ்டம்போல் மூன்று வருஷத்துக்கு அதிகப்படாமல் ஏற்படுத்திக்கொள்ளலாம். இந்த மந்திரத்தை விஷம் தீண்டினவன் தனக்குத்தானேயும் சொல்லிக்கொள்ளலாம். பிரக்ஞை தப்பினவனுக்கும் ஆடுமாடு முதலியவற்றிற்கும் காதில் சொன்னுல் போதும், விஷம் தீர்ந்ததைப்பற்றி நிஜாம் அவர்களுக்கு எழுதும்கடிதத்தின் மேற்கவரில் "ஹைதராபாத்து, டக்கான்" என்று விலாசமெழுதினுல் அவர்களுக்குக் கிடைத்துவிடும். அது கிடைத்தவுடன் அவ்விஷயத்தை ஒப்புக்கொண்டதாக அவர்கள் பதில் எழுதுவார்கள்.

"இஸ்லாம்நேசன்.

## புத்தகவரவு.

ஸ்ரீகாசியாத்திரா மான்மிய கங்காயாத்ரா தீபிகை:—இப்புத்தகத்தில் தீர்த்தம் க்ஷேத்திரம் மூர்த்தி முதலிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற மகாக்ஷேத்திரமாகிய காசிக்ஷேத்திர மான்மியமும், சகல ஜீவாத்மாக்களின் பந்தபாசங்களைப் பற்றற அறுத்து பார்வதிபங்கன் பாதஞ் சேர்க்கும் ஒப்புயர்வற்ற கங்காநதியின் பிரதாபமும் புண்ணியபூமியாகிய இப்பரதகண்டத்திலுள்ள ஒவ்வொரு க்ஷேத்திரங்களுடனும், அந்தந்த க்ஷேத்திர வரலாறுகளுடனும் மிகஇனிய செந்தமிழ் நடையில்வரையப்பட்டிருப்பதானது மிகவும் நன்ருய் இருக்கிறது. இவ்வாறு தமிழ்மக்களுக்குப்பெரிதும் பயன்படுமாறு இவ்வறிய நூலை இயற்றிவாருகிய திருவையார் ஸ்ரீமான்பாரி சிவராமசாஸ்திரியாரவர்களுக்கு நன்றிசெலுத்தத் தமிழுலகம் கடமைப்பட்டிருக்கிறது. தமிழறிந்த ஒவ்வொருவர் கையிலும் இப்புத்தகத்தின் பிரதியொன்று இருப்பது இன்றியமையாதனவாகும இதன் விலை 1—8—0 இப்புத்தகத்தை நமக்கு நேரில் உபகரித்த ஆசிரியரவர்களுக்கு நமது மனப்பூர்வமான நன்றியரிதலைச் செலுத்துகிரும்.

## வர்த்தமானங்கள்.

**சூரியன் குஞ்சு:**—சிட்டினி எனனும் நகரில் ஒருமின்சார விளக்கு அமைக்கப்பட்டிருக்கின்றது. அது எட்டுகோடி இருபது லட்சம் மெழுகுவர்த்தியினொளியுடையதாம்.

**தபாற்தோகை:**—உலகம் முழுவதும் வருடம் ஒன்றிற்குச்சராசரி 1200-கோடி காயிதங்களெழுதப்படுகின்றன. நாளொன்றுக்கு எழுதப்படுவது 3-கோடியே 30-லெட்சமாம்.

**செடிவளர்க்கும்மின்சாரம்:**—சுவிஸர்லாண்டு தேசத்திய சாஸ்திரியொருவரால் ஓர் நூதனமான இயந்திரங்கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது அதன்மூலமாய் விதைகள் விரைவில் முளைத்து ஏராளமான பயனைத்தருகின்றனவாம். கெட்டுப்போன விதைகளும் மின்சாரத்தின் உதவியால் முளைத்து விடுகின்றனவாம். இதன்சோதனை லண்டனில் நடைபெருகிறது.

**கந்தகச்சுரங்கம் வேடித்ததால் நேர்ந்த விபத்து:**—சிசிலித்தீவில் ட்ரேயொனல்லா என்னும் பிறதேசத்திலிருக்கும் கெந்தகச்சுரங்கம் சிலதினங்களின்முன் திடும்பிரவேசமாய் வெடித்துப்போனது. இதனால் அங்குவேலை செய்துகொண்டிருந்த 42-பேர் உடனேயுயிர்துறந்தனர். இவர்களைத் தப்பிவிக்கும்பொருட்டு வெளியிலிருந்து சென்ற இருவரும் யாதும் சாத்தியப்படாது மாண்டனராம்.

**இங்கிலாந்தும் பொய்ப்பல்லும்:**—பிரதி வருஷமும் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு 2-கோடி பொய்ப்பற்கள் எற்றுமதி செய்யப்படுகின்றன. இதனால் இங்கிலாந்தில் சுயபற்களையுடையோர் ஒருவராவதிருக்கமாட்டார்களென்றும் க்ரேட் ப்ரிட்டனில் அரைவாசிப்பேர் பொய்ப்பல்லுடையவர்களென்றும் காணப்படுகிறது. அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் ஸ்திதி இதற்குக் குறைந்ததல்லவாம்.

**குழந்தையை நாய்காத்தது:**—லண்டன் பட்டினத்திலுள்ள ஓர் வீதியில் ஓர்குழந்தை விளையாடிக்கொண்டிருந்தது. அச்சமயத்தில் மிகவும் தீவிரமாக இக்குழந்தைக்குச் சமீபத்திலோர் குதிரைவண்டி வந்துவிட்டது. ஆங்குநின்ற ஓர்நாய்திடீரெனப்பாய்ந்து. குழந்தையை அப்புறம் இழுத்துக் காப்பாற்றியது. இரண்டு விநாடிக ளதிகமாயிருந்தால்குழந்தை யிறந்தே போயிருக்கும். இதைக்கண்ட ஓர்சீமாட்டி அந்நாய்க்கு வெள்ளியினால் ஓர் கழுத்தாபரணம் போட்டனள். ஆ! ஆ! நாயின் அறிவே அறிவு!

**இந்திய ஸென்ஸெஸ்:**—உத்தியோக முறைப்படி முடிவான கணக்கு. 1911-வருஷத்திய ஸென்ஸெஸ்படிக்கு இந்தியாவிலுள்ள ஜனத்தொகையின் மொத்தம் 315,132,537, சென்ற ஸென்ஸெஸை விட ஜனத்தொகை நூற்றுக்கு 6.71 அதிகமாயிருக்கிறது. பம்பாய் ராஜதானி 19672642, மதராஸ் 41405404, ஐதராபாத்து 13374676, மைசூர் 5806198, கொச்சி 918110, திருவனந்தபுரம் 3428975, இந்தியா மொத்த ஜனத்தொகை 315132537-ல் ஆண்கள் 161326,110-ம், பெண்கள் 153,806,427-ம் ஆவார்கள்.

**கங்கையில் வாராவதி:**—கங்காநதியின் கீழ்பாகத்தில் வாராவதி கட்டுவது தற்போது இரண்டாந்தரமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இது 5857-அடி நீளமுடையதாம். இதன்மேல் இரட்டைலயனுள்ள இருப்புப்பாதை போடப்படும். இதனை ஜலப்பெருக்கு உண்டாகாதபடி அதனிருபுறத்தும் 4000-அடி நீளமுள்ள அணைகள் கட்டப்பட்டு வருகின்றன. இதில் 20000-ஜனங்கள் வேலைசெய்கின்றார்களாம்.

**பூமிக்குள் ரெயில்:**—லண்டன் நகரில் பூமிக்குள் ரெயிலோடுகிறது. பாதாளத்திலிருந்து பிரயாணிகள் மேலே வரவேண்டுமானால் மனிதனை இழுத்துக்கொண்டுவரும் ஒருவிதயந்திர சகாயத்தைக்கொண்டு மேலேற வேண்டும். இப்படி ஏறுவதில் அதிக நேரமாகிறதென்று யோசித்து இப்போது நூதனயந்திரமொன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. படிப்படியாயுள்ள ஏணி ஒன்று அந்த இடத்தில் சுற்றிக்கொண்டேயிருக்கும். பூமியை யடையவிரும்புவோன் அந்த ஏணியின் படியில் காலை வைப்பானேயானால் உடனே நிலத்தையடையலாம்.

**ஊர்சுற்றித் திரியும் வைத்தியர்கள்:**—கண், பல் இவைகளின் வியாதியை சொஸ்தம் செய்துவிடுவதாகச் சொல்லிக்கொண்டு இதர தேசங்களிலிருந்துவரும் அன்னியர்களிடம் வைத்தியம் செய்துகொள்வதில் வெகு ஜாக்கிரதையோடு இருக்கவேண்டுமென்பதை தங்கள் ஊர் ஜனங்களுக்கு கிராம முனிஸிப்புகள் எச்சரிக்கவேணும், யாருக்கு வைத்தியம் செய்வதாகச் சொல்லப்படுகிறதோ அவர்களுக்கு இவர்களால் பெரிய அபாயங்கூட உண்டாகிவிடுகிறதென்று தஞ்சாவூர் கலெக்டர் டிஸ்டிரிக்டு கெஜட்டில் ஒரு விளம்பரம் செய்திருக்கிறார்.

**ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவர் காலஞ்சென்றார்:**—ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரைப்பற்றிக் கேள்வியுறாத தமிழர் இரார்என்பது திண்ணம். மதுரையில் தமிழ்ச்சங்கத்தை ஸ்தாபித்து அதற்குப் பிரஸிடெண்டாயிருந்து வந்த இவர் ஏழைகளுக்கும் தமிழ் வித்வான்களுக்கும் பேருதவி செய்திருக்கிறார். இவருக்கு வயது 42-தான். இவ்வளவு இளவயதிலேயே இவர் சென்ற சனியன்று மரித்துப்போனது தமிழுலகத்திற்கு மிகுதியும் விசனத்தைத்தரத்தக்கதே. இவருக்குப் பிறகு மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் கதி என்னவாகுமோ என்று அஞ்சும்படியாகவுமிருக்கிறது.

**டில்லிதர்பாரும் திருவாவடுதுறை மஹா சன்னிதானமவர்களும்.**

திருவாவடுதுறை பண்டார சன்னிதி சக்கரவர்த்தி தம்பதிகளுக்குக் குதூகலத்துடன் நல்வரவு கூறுவதாக தந்திகொடுத்தார். பண்டார ஸன்னிதிக்கு சக்ரவர்த்தியின் பதில் தந்தி. சக்ரவர்த்தியின் அந்தரங்கக் காரியதரிசி பண்டாரசந்நிதிக்கு அவர் அனுப்பிய ராஜவிஸ்வாஸத் தந்திக்காக சக்ரவர்த்திவந்தன மளித்ததாய் தெரிவித்தார். டிஸம்பர்மீ 2உ பகல் 2-மணிக்கு மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தி சக்கரவர்த்தினி அவர்கள் இந்தியாவில்வந்திறங்கும்தினத்தில் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாகனம் தங்கிய மகாசன்னிதானம் அவர்கள் 101-வெடிகள் போடுவித்தார்கள். 11உ இரவு திருவிடமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமியின் ஆலயத்தில் லக்ஷதீபம்போட்டு சிறப்பிவித்தார்கள். 12உ திருவிடமருதூரிலுள்ள திருவாவடுதுறை மடத்தில் சங்கீதகச்சேரி கதைமுதலியவைகள் நடத்தப்பட்டன. மாலை 1-மணிமுதல் 3-மணிவரையில் மடத்தில் சகல ஏழை ஜனங்களுக்கும் அன்னம் வஸ்திரம் கொடுக்கப்பட்டன

## பிரசிநோத்தர ரத்நமாலை என்னும் ஓர்வேதாந்த சாஸ்திரம்.

இது யாவருக்கும் புலப்படும் டியாக செந்தமிழ் நடையில் வினுவிடை ரூபமாய் விரிவான 1000-பிரசினோத்திரங்கள் வரை நல்ல வெண்மையான கிளேஸ் பேபரில் தெளிவான அக்ஷரங்களால் பாரம் 8.பேஜை ஸைஸில் ஏறக்குறைய 150-பக்கங்கள் வரை அச்சிடப்பட்டுள்ளது. இதில், அகண்ட பரிபூரண ஸச்சிதானந்த ஸ்வரூபத்தின் மூன்று லக்ஷணங்களும், உள், வெளி, என்ற இருவகைப் பிரபஞ்ச விஷயங்களும், அதாவது இந்த உலகத்தைப்போல் நம் சரீரத்தினுள்ளிருக்கும் உலக விசித்திரங்களும், கர்மம், பக்தி, ஞானமாகிய மூன்று யோக விஷயங்களும்; பிரமம், சக்தி, திருமூர்த்தி என்பவைகளின் வரலாறுகளும், ஈசுவர நிரணயத்தைப்பற்றிய ஒவ்வொரு மதஸ்தரின் அபிப்பிராயமும், கங்கா நதியின் உற்பத்தியும், மகாமேருவின் சிறப்பும், சூரியனுடைய லோக யாத்திரையின் சூக்ஷமமும் இன்னும் இதுபோல் பல சிறந்த விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. தேவையுள்ளவர்கள் இதனடியில் கையொப்பமிட்டவருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். வி. பி. மூலம் இதன் விலை அணா 10.

**டி. சுப்பிரமணிய ஐயர், ஷாப் வியாபாரம்.**
**இந்துசாஸ்திராபிமானி, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா.**

## அசாதிரோகங்களுக்கு பிரதிக்ஷ அவுஷதம்.

**கஸ்தூரி திராவகம்:**—இந்தத்திராகவத்தில் ஒருநேரத்துக்குமூன்று சொட்டு வீதம் ஒரு ஒயின்கிளாஸ் தண்ணீரில்விட்டு காலை, மாலை இரவு படுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட நீர்அழுவினுல் தாங்கமுடியாத வருத்தத்தை மூன்றுநாளையில் சுகமாக்கும். 40 நாள் மருந்து சாப்பிட்டால் வியாதிநன்ருய்ச் சொஸ்தமாகும் தருணவயசுள்ளவர்களுக்கு உண்டான பக்கவாய்வு துர்நடத்தையால், ஆண்மைப்பலமற்ற சையோகம் செய்ய இயலாதவர்களுக்கு உள்ளுக்குச்சாப்பிட மேற்படி திராகவமும் ஆணுடம்பில்பூச துஜ்ஜிபங்கதைலமும் எடுத்து உபயோகிக்க வேண்டியது. இன்னும் மேற்படி திராவகமானது இருமல், மூலச்சூடு, காசரோகம், அதிகநாள்ச்சென்ற வாதரோகம், தலைச்சுற்று, மூளை பலவீனம் ஞாபகசக்திக்குறைவு, கண்புகைச்சல், பார்வைக்குறைவு, நாட்சென்ற பிரமேகம், இவைகளுக்குக் கைகண்ட ஔஷதம். இந்த மருந்திலே கஸ்தூரி, தங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், சாம்பிராணிப்பதங்கம், வேறு மூலிவகைகளும், சேர்த்து திராவகம் வடித்துவைத்திருக்கின்றேன். இந்த மருந்துகளெல்லாம் சேர்க்கப்பட்டிருப்பதனுல்தான் இது சீக்கிரம் சுகமடைவிக்குமெனக் கூறுகின்றேன். இந்த மருந்தைக்கொடுத்து அனேக பிரயாணிகளைச் சுகப்படுத்தி விலைஉயர்ந்த வெகுமதிகளும் பெற்றிருக்கின்றேன். இப்போது எல்லாருடைய பிரயோசனத்திற்காக சொற்பசெலவெடுக்க வெளியே பிரசித்தம் பண்ணிவருகின்றேன். பித்தபாண்டு, மகோதரம், காச்சல்கட்டி, வயிற்றிலிருக்கும் துர்நீர்,

களுக்கு கைகண்ட ஔஷதம். விலை அரை அவுன்சுக்கு ரூபா 10. இதற்குக்குறைந்து அனுப்பப்படமாட்டாது. தபாற்செலவுபிரத்தியேகம்

**துஜ்ஜிபங்கதைலம்**—சிலர் தம் இளம்பிராயத்தில் புத்தியீனமாய் இந்திரியத்தை தம்கையால் பளுதாக்கிக்கொள்வதால் சிலநாளைக்குப்பின் நரம்புகள் பளுதுபட்டு ஆணுடம்பு பலனற்றுச் சுருண்டு சிறிதாய்ப்போய் இந்திரியம் குறைந்தும், துர் ஸ்திரீ சையோகத்தால் அனேக உஷ்ணமான மருந்துகள் சாப்பிட்டு பெலனற்றுப்போகின்றூர்கள். இவ்விரு வகையுள்ளவர்கள் மனக் கவலையுடன் வியாதியை ஒருவருக்கும் சொல்லாமல் வெட்கப்பட்டு இருப்பார்கள். அவர்கள் இத்தைலத்தை ஆண் உடம்பில் பூசி உள்ளுக்குக் கஸ்தூரி திராவகமும் சாப்பிட்டால் ஆண் உடம்பு சரியான நிலைமைக்கு வந்து பலப்பட்டு இந்திரியம் விர்த்தியாகி 41-தினத்துக்குள் வியாதி சுகப்படும். 21-நாள் தைலம் பூசி மேற்படி திராவகம் சாப்பிடுவரேல் வியாதியின் சுகந்தெரியும். ஒரு அவுன்ஸ் தைலத்தின் விலை ரூ 2—8—0. தபாற்செலவு பிரத்தியேகம்.

**வீரிய ஸ்தம்பனக் குளிகை**—ஆச்சரியம்! மிக்க ஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒரே குளிகையில் தெரியும். இந்தக் குளிகை (இந்திராசனம்) ஒரு நாளில் ஆயிரம் ஸ்திரீகளைச் சம்போகிக்கிறதற்காக உண்டாக்கப்பட்டது. இதைச் சிலர் சாஸ்திரத்திற் சொல்லியபிரகாரம் செய்யாமல் சொற்ப கிரயத்திற்கு விற்பனை செய்கிறூர்கள். அதைச் சனங்கள் பெற்று அதிலே சொல்லிய காரியங்கள் முழுதும் வித்தியாசப்பட்டு ஏமாந்துபோகிறூர்கள். ஆனல் சாஸ்திரப்படி அதிக பொருள் செலவழித்து செய்கிறவர்களிடம் பெறப் பின்னடைகிறூர்கள். இது உலகவியல்பே, இதில் முக்கியமாயறியவேண்டிய காரியம் யாதெனில், இதின் முழுக்கிரயமும் கொடுத்து எடுத்து, ஒரு குளிகையாற் சுகமறியலாம். காரியமும் விளங்கும். இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத் தேள்வையில்லை. 12-குளிகைக்குக் குறைய அனுப்பப்படமாட்டாது. பரீட்சித்தவர்களே இதன் சுகத்தை அனுபவிப்பார்கள். 12-குளிகையின் விலை ரூ 2 தபாற்செலவு அண 4,

சாப்பிடும் விதம் சையோகஞ் செய்ய அரை மணித் தியாலத்திற்கு முன் ஒருமாத்திரையைச்சாப்பிட்டவுடன் காச்சியபசும்பாலில் கற்கண்டு போட்டுக் குடித்தால் இந்திரியம் இளகாது. இளக வேண்டுமானல் எலுமிச்சம்பழம் சாப்பிடவும்

கெங்காதார் தைலம்—அண்டவாய்வுக்குக் கைகண்ட உண்மையான மருந்து இதன் விலை 1 அவுன்சு ரூ 5.

மகாநாராயண தைலம்—வாய்வுகள், கபாலபீனிசம் முதலானதுக்கு கைகண்டது. 1 அவுன்சுக்கு 1 ரூபா. (மேற்கண்ட மருந்துகளுக்கு தபாற் செலவு பிரத்தியேகம்.)

**மிருத்துசீவன் அல்லது கஸ்தூரிமாத்திரை**—எட்டுவிதமான சுரத்திற்கும், அசுத்தசலத்தினுல், கொசு முதலான விஷ செந்துக்களினு லுண்டாகும் மலேரியா ஆகிய விஷக்காச்சல்களுக்கும், 18-விதமான சன்னிக்கும் இதில் ஒரு மாத்திரையை இஞ்சிச் சாற்றில் உரைத்துச் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட சன்னியும் ஒரு அல்லது இருவேளை மருந்திற் சுகப்படும் ஏழுவேளை சாப்பிட்டால் சன்னி, காச்சல், சுரம், முதலியன சுத்தமாய்ச் சுகமாகும். 12 குளிகையின் விலை ரூ 2.

**காமனீமது பஞ்சனீ மாத்திரை:**—இது தங்கம், அபரக் பஸ்பம், கஸ்தூரி, குங்குமப்பூ, லிங்கசெந்தூரம், முதலிய விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்து செய்யப்பட்டுத் தயாராயிருக்கிறது. இதன் சொற்ப குணத்தை மட்டும் காட்டுகிறேன். நீரிழிவு, காசம், இருமல், ஈழை, தீராத வாதரோகம், பிரமேகம், மூலச்சூடு புதிதாய்க்காணும் அண்ட வாதம், வெள்ளை முதலிய வியாதிகள் தீர்ந்து தாதுபுஷ்டி உண்டாகும். மூன்று நாளில் நல்ல குணம்தெரியும். 44-நாளில் வியாதி பூரண சுத்தமாகும். காலை மாலை 14-நாள் சாப்பிடக்கூடிய 28 மாத்திரைகளின் விலை ரூபா 5. 44-நாள் சாப்பிடக்கூடிய 88-மாத்திரைகள் எடுத்தால் ரூபா 13-க்குக் கொடுக்கப்படும். தபாற் செலவு பிரத்தியேகம்.

**சந்திரிகா பிரதம மாத்திரை:**—இந்த மாத்திரை காசம், பவுத்திரம், அண்ட வாயு, பக்கவாயு, பித்தபாண்டு, வெள்ளை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, பீனசக்கபாலம், துர்ஸ்திரீகமனத்தாலுண்டான நோய்கள், வெண்குட்டம், நீரழிவு, போகத்தாலுண்டான நோய்களை எல்லாந் தீர்க்கும். இம் மாத்திரையை 21 நாள் சாப்பிட்டால் பூரண சுகமுண்டாகும். மருந்தெடுக்கும்போது வியாதிக்கேற்ற அனுமானம் தெரிவிப்போம். 44 குளிகையின் விலை ரூபா மூன்றரை.

**புத்தகங்கள்**—பின்னுற் காட்டப்பட்டிருக்கும் அருமையான புத்தகங்கள் மானுடர் எவரும் இகபர நன்மைகளைக் கருதி அவைகளைக் கைப்பற்றிக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பதால் இவ்விரு விஷயங்களுக்கும் குருவைப்போல் போதிக்கக்கூடிய மெத்த அருமையான புத்தகங்களான தால் ஒவ்வொருவரும் இவைகளைக்கட்டாயம் வாங்கிவாசிக்கவேண்டியது.

இவைகள் செந்தமிழ் அலங்கார நடையில் எவரும் வாசித்தறியக் கூடிய வெள்ளைமொழிகளாலியற்றப்பட்டு வாசிப்போருக்கின்பத்தையும் மனோஉற்சாகத்தையும் கொடுக்கக்கூடியவைகள், சொற்ப பிரதிகள் தான் இருக்கின்றன.

காலகாரணஞ் செய்யவேண்டாம்.

கோகசாஸ்திரம் மாபிள் கட்டு ஒரு பிரதி ரூபா 3 கலிக்கோ ரூபா 4.

கைத்தொழில் போதினி—மாபிள் கட்டு ரூ. 1. கலிக்கோகட்டு ரூ. 2.

பூலோகௌஷகோபகாரி வாணவேடிக்கைகள் அடங்கிய பத்தாம் சங்கியை ஒன்றுக்கு அணு 10.

அனேக இங்கிலீஷ் சாமான்களடங்கிய ஒன்பதாம் சங்கியை ஒன்றுக்கு அணு 12.

சோகன்லால் சரித்திரம் ஒன்றுக்கு அணு 8.

இன்சுபெக்றர் சீபுசாய்பு சரித்திரம் அணு 12.

மேற்படி சரித்திரமும் சோகன்லால் சரித்திரமும் ஒரே கட்டிடம் ஒன்றுக்கு ரூபா 1—4—0.

ருஷிய ஜப்பானிய யுத்தம் இருபகுதிகள் ஒரு ரூபா.

இரசமணி செய்யும் புஸ்தகம் (8-பக்கம்) ரூ. 1—4—0.

மேற்காட்டிய புத்தகங்கள் வேண்டுவோர்க்கு தாமதமின்றி சாக்கிரதையோடு அனுப்பப்படும். தபாலில் வேண்டுவோர்க்கு தபாற்செலவு பிரத்தியேகம். மற்ற விபரங்களுக்கு காட்லாக்கை எடுப்பித்துப் பார்க்கவும் இனமாக அனுப்பலாம். ஒருமுறை இப்பொருட்களை வாங்கி தினமும் மகிழ்வடையுங்கள்.

எமது விலாசம்,

**மகாராஜ், கேங்கா பிரஸாத் பண்டிதர்.**

மருதானை முதலாம் டிவிஷன் No. 74, கொழும்பு.

## ஆயுள்வேத அவுஷதம்.

### போதிகைமா முனிவர் அருளிச்செய்த மஹாசஞ்சீவி.

### அமிர்தநந்திலேகியம்.

1. தீரும் வியாதி:—வண்டுகடி, செய்யான்கடி, காட்டுத் தவளைகடி, பச்சோந்திகடியும், சூலை, குஷ்ட்டம், கரப்பான், அண்டப்புத்து, அரையாப்பு, விப்புருதி, கண்டமாலை, கபால குஷ்ட்டம், கிரந்தி, கிரிச்சினம், கைவெள்ளை, சருமேகம், செம் மேகம், மேல் கால் கைப்பிடிப்பு, வாதப்பிடிப்பு, வங்குமிசோரி, செஞ்சொரி, வீக்கம், எலிகடி, ஈளை, இளைப்பு, இருமல், காச்சல், தலைவலி, ஜன்னி, காசம், பாண்டு, சோகை, மகோதிரம், பெருவயரு, விஷக்கடி, வாதம், சிலேற்பனம், உளமாந்தை, சூலை நோய், வாய்வு, வயற்றுநோய், பல்லரணை, பல்ச்சூலை, சிலந்தி, பருவு, பிளவை, திடைவாளை, மூளங்கால் வாதம், கரப்பான் புண், கால்புத்து, ஆண்சிலந்தி, பெண்சிலந்தி, புளுகண், வெடி சிறங்கு, ஊனுருக்கி, கன்ன வீக்கம், யோனிப்புத்து, லிங்கப் புத்து, நரம்புசிலந்தி, எலும்புத்தின்னி, சண்டிப்புண், ஆனைச் சொரி, சுழலை, மார்புஆணி, படர்தாமரை, சுவலிப்புகள், மதபடித ப்பு, தடிப்பு, புழுநெளிதல், முதலியகொடியவியாதிகளும் தீரும்.

☞ கடுமையான பத்தியம் கிடையாது. உப்பு புளியும் உபயோகிக்கலாம். 20-நாள் இரண்டு வேளையும் சாப்பிடக்கூடிய அமிர்தநந்தி லேகியம் டப்பி 1-க்கு வி. பி. உள்பட ரூபாய் 2.

### வாசாதிலேகியம்.

2. க்ஷயம், வறக்ஷி, உஷ்ட்ணசுரம், உளமாந்தை, மருந்தீடு, பீனசம், ஈளை, இருமல், மேல்விஷம், கசநோய், குருகிறல், தொண்டைக்கம்மல், தாதுநஷ்ட்டம், அசகி, எலும்புருக்கி, குத் திருமல், ரெக்தக்ஷயம், பித்தச்சூடு, பிரமேகசுரம், பித்தக்ஷயம், இவைகள் தீரும். வியாதியுடைய ஸ்திரி புருஷாள் இருவரும் உபயோகிக்கலாம். பத்தியம் கிடையாது.

1-சேர் டப்பி1-க்கு வி. பி. உள்பட ரூபாய் 2.

### கூழ்பாண்டலேகியம்.

3. வேளைஒன்றுக்கு கொட்டைப்பாக்கு பிரமாணம் காலை மாலை இரண்டு வேளையும் சாப்பிடவேண்டியது. தேகவறக்ஷி, எலும்புருக்கி, சொரிசிறங்கு, நீர்க்கடுப்பு, கல்லடைப்பு, சதை யடைப்பு வெள்ளை வெட்டை யை நிவர்த்திசெய்து கால் கை கண் எரிச்சலை குளிரச்செய்து திரேகபுஷ்டியைத்தரும். ஸ்திரீ புரு ஷாள் இருவர்களும் உபயோகிக்கலாம். பத்தியம் கிடையாது.

1-சேர் டப்பி வி. பி. உள்பட ரூபா 1—8—0

**தி. அண்ணுஸாமி வைத்தியர்,**

கருந்தட்டாங்குடி போஸ்ட், தஞ்சாவூர்.

## "கிருஷிகன்."

விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்யமு முள்ளவர்களால் எழுதப்படும். ஓர் மாதாந்தரப் பத்திரிகை. எல்லாரும் எளிதில்வாங்கி வாசிக்கவேண்டுமென்னும் முக்கியமானஎண்ணத்துடன் வருஷ சாந்தா தபால்கூலி உள்பட அணா 12, என்று குறைச்சலாய் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திறகுக் குறைந்த சந்தா அங்கீகரிக்கப்படமாட்டாது. பிரதிவருஷமும் சித்திரைமாதம் முதல் ஆரம்பிக்கிறது. வருஷமத்தியில் சேர்ந்தாலகூட சித்திரைமாதம் முதல்தான் கணக்கு வைக்கப்படும். வேண்டியவர்கள் ரங்கராஜு பிரதர்ஸ் 5, மௌண்ட் ரோட் சென்னைஎன்று எழுதி, வி. பி. மூலமாய்ப்பெற்றுக்கொள்ளலாம்.

இதைவிட வேறுஅத்தாக்ஷி என்ன;

"இராஜாம்பாள்" புஸ்தகம் பிரசுரமான மூன்று வருஷங்களுக்குள் மூன்று பதிப்புகள் அச்சடித்து பூராவாய் செலவாகி இப்போது நான்காம் பதிப்பு அச்சிலிருக்கிறது.

"இராஜாம்பாள்" "சந்திரகாந்தா" "மோஹனசுந்தரம்" என்னும் மூன்றுநாவல்களும் ஒன்றைவிட ஒன்று நான்முன் நான்முன் எனகைதட்டி ஆர்ப்பரித்து சந்தோஷிக்கச் செய்யக் கூடிய சக்திவாய்ந்தவை எல்லாரும் எளிதில் வாசிக்குமாறு இனிய எளிதானநடையில் எழுதப்பட்டிருகின்றன. மேலும் மேற்கண்ட ஒவ்வொரு நாவலிலும் கண்டோர் மனதைக்கவரும் மூன்றுசித்திரப்படங்கள் வழவழப்பான கடிதத்தில் அச்சடித்து சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நாவல்களைப்போல் வேறுநாவல்கள் இதுவரையில் பிரசுரிக்கப்படவில்லையென்று பத்திராசிரியர்களாலும் வாசித்த எல்லாராலும் புகழப்பட்டது. இவைகளைப் புகழ்ந்து ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் கிடைத்திருக்கிறது. இவ்வளவு அபூர்வமாகிய நாவல்கள் ஒவ்வொன்றின் விலை அணா12, தபால்கூலி, வி. பி. கமிஷன் பிரத்தியேகம் வேண்டியவர்கள் ரங்கராஜு பிரதர்ஸ் 5-மௌண்ட்ரோட் சென்னை என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

---

| | | | | |
|---|---|---|---|---|
| குளிர் ஜுரத்திற்கு மாத்திரை அல்லது திராவகம் | ரூ | 1 | 0 | 0 |
| பலஹீனத்திற்கு மாத்திரைகள் ... | ,, | 1 | 8 | 0 |
| கடியை ஓரேநாளில் சொஸ்தப்படுத்த எங்கும் விற்கப்படுகிறது ... ... | ,, | 0 | 4 | 0 |
| பற்பொடி ... ... | ,, | 0 | 4 | 0 |

**Dr. H. L. Batliwalla J. P. Warli Loboratory,**
*Dadar Bombay.*

## ரோமசங்காரி சோப்.

தேகத்தின் எந்தப்பாகத்திலும் இந்த ஸோப்பை உபயோகித்தால் யாதொரு கெடுதியுமின்றி ரோமங்களைச் சங்காரஞ் செய்துவிடும். 6-மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய கட்டி 1-க்கு விலை 6-அணா டெஜன் ரூ 4. வி.பி. சார்ஜ் 1-முதல் 3-க்கு 4-அணா.

## ரோமப்பிசின்.

இப்பிசின் நரைத்த மயிரை 2 நிமிஷத்திற்குள் பழயபடி கறுப்பாக்கிவிடும். கெடுதி செய்யக்கூடியது ஒன்றும் இதில் கிடையாது 1-புட்டி 3-மாதத்துக்கு போதுமானது. டைரக்ஷன் மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு விலை 12-அணா டெஜன் 1-க்கு ரூ 8. 1-முதல் 3-புட்டிக்கு வி பி. சார்ஜ் 4-அணா

## கார்பாலிக் டூத்பவுடர்.

இந்தபற்பொடி; வாயிலுண்டாகும் துற்நாற்றத்தைபோக்கி பல்லைச்சேர்ந்த எல்லா வியாதிகளைப்போக்கி பற்களை கெட்டிப் படுத்தும். டின் 1-க்கு $1\frac{1}{2}$-அணா, டெஜன் 14-அணா 1-டெஜனுக்கு வி. பி. சார்ஜ் 4-அணா;

எட்வர்டு பவுடர்—அல்லது கடிகளுக்கு கைகண்ட மருந்து 24-மணி நேரத்துக்குள் சுவஸ்தம் செய்யக்கூடியது. புட்டி 1 க்கு அணா 4. டஜன ரூ 2—8—0. வி. பி சார்ஜ் 1-முதல் 6 புட்டிகளுக்கு அணா 6.

Apyly to Messrs—J. SUR & Co,
Patent Medecine Sellers & General order Suppliers,
South Sinthee Road, P. O. (B) Gossipore, Calcutta.
**Agent. Lakshmivilasa Provident Intitution Ld. Kumbakonam.**

---

## யாழ்ப்பாணம் அச்சுவேலி யந்திரசாலை.

இதினின்று "சன்மார்க்க போதினி" என்னும் புதினப்பத்திரிகை ஒன்றுவிட்டொரு சனிக்கிழமைகளில் வெளிவரும் வைத்திய விஷயங்களுமுண்டு, வருடவிலை தபாற்செலவுட்பட ரூபா 2.

| | | | |
|---|---|---|---|
| பால வைத்தியம் இங்கிலீஷ் தமிழ் முறை | | அணா | 8 |
| பிரசவ வைத்தியம் | ... | ... | 8 |
| நயன விதி (செய்யுள்) தமிழ் முறை | | ... | 5 |
| தருமபுத்திர நாடகம் | ... | ... | 8 |
| இராம நாடகம் ... | ... | ... | 8 |

இவைகளை விரும்பினோர் கீழ்க்காட்டிய விலாஸத்துக்கு எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்க.

ச. தம்பிமுத்துப்பிள்ளை,
புத்தூர் போஸ்டு,
அச்சுவேலி, யாழ்பாணம்.